இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை

மட்டம் - 04

**EPU4236**–முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் தொழில்வாண்மை வகிபங்கு

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- **20.06.2025** நேரம்:பி.ப 01.30 - பி.ப 03.30

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி – I

1. இருபத்தோராம் நூற்றாண்டின் கற்றல் சூழலில் விமர்சன ரீதியான சிந்தனையின் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக விபரிக்குக.
2. ஆரம்பக் கல்விக்குப் பொருத்தமான கற்பித்தல் முறைகளை இனங்கண்டு சுருக்கமாக விபரிக்குக.
3. விளைதிறனான கற்றல் சூழலினை உருவாக்குவதில் வகுப்பறை முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக விளக்குக. இது எவ்வாறு மாணவரின் நடத்தையிலும் கற்றலிலும் தாக்கம் செலுத்துகின்றது.
4. ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் பாடசாலைக்கு வெளியே மேற்கொள்ளும் பல்வேறு வகிபாகங்களைச் சுருக்கமாக விபரிக்குக.
5. ஆரம்பக் கல்வியில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் மூன்று (03) வகையான கணிப்பீட்டு முறைகளை இனங்கண்டு அவற்றினைச் சுருக்கமாக விபரிக்குக.
6. ஆசிரியர்கள் தம்மை இற்றைப்படுத்த அறிந்து கொள்ள வேண்டிய தற்கால ஆசிரியத்துவ மூலோபாயங்கள் மூன்றினை (03) இனங்கண்டு சுருக்கமாக விளக்குக.
7. இருபத்தோராம் நூற்றாண்டுத் திறன்களை ஆரம்பப் பாடசாலை மாணவர்களிடையே உருவாக்குவதில் கூட்டுக் கற்றலின் வகிபங்கினை விளக்குக.
8. கற்பித்தல் முறைகளை பாடத்திட்டமிடலின் கற்றல் நோக்கங்களுடன் இணைப்பதின் முக்கியத்துவத்தினை விளக்குக. இந்த இணைப்பானது மாணவர்களின் கற்றலை எவ்வாறு பாதிக்கின்றது என விளக்குக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. "இருபத்தோராம் நூற்றாண்டின் கல்வியின் மேம்பட்ட சூழலை அடைவதற்காக ஆசிரியர்கள் தங்களின் கற்றல் கற்பித்தலை இயைபாக்கம் செய்ய வேண்டியது அவசியமானதாகும்."

   அ. இருபத்தோராம் நூற்றாண்டின் கற்றல் - கற்பித்தல் எண்ணக்கருவினை வரையறுக்க. இதன் முக்கிய பண்புகள் எவை?

   (07 புள்ளிகள்)

ஆ. ஆரம்பக் கல்வியில் இருபத்தோராம் நூற்றாண்டின் திறன்களை விருத்தி செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தினை ஆராய்க.

(07 புள்ளிகள்)

இ. இருபத்தோராம் நூற்றாண்டின் திறன்களை விளைதிறனுடன் வகுப்பறையில் மேம்படுத்துவதற்கு பொருத்தமான இரண்டு (02) மூலோபாயங்களை இனங்கண்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

10. "ஆரம்பக் கல்வியில் வெற்றிகரமாகக் கற்பித்தலுக்கு விளைதிறனான பாடத்திட்டமிடலும் முறையியல் திறன்களும் அத்தியவசியமானவையாகும்."

அ. ஆரம்பக் கல்வியில் பாடத்திட்டமிடலின் முக்கியத்துவத்தினை விளக்குக. இது எவ்வாறு விளைதிறனான கற்றல் - கற்பித்தலுக்கு துணை புரிகின்றது.

(07 புள்ளிகள்)

ஆ. நன்கு வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டமிடலின் முக்கிய கூறுகளை விபரிக்க. ஒவ்வொரு கூறுக்கும் உதாரணங்களை முன்வைக்குக.

(07 புள்ளிகள்)

இ. பாடங்களைக் கற்பித்தல் முறைகளுக்கான திறன்களின் பங்களிப்பினை விளக்குக. இத்திறன்கள் எவ்வாறு மாணவரின் புரிதலையும் ஈடுபாட்டையும் மேம்படச் செய்கின்றன.

(06 புள்ளிகள்)

11. "விளைதிறனான கற்றல் சூழலை வடிவமைப்பது மாணவரின் ஈடுபாட்டை ஊக்குவிக்கவும் கல்வி அடைவுகளை மேம்படுத்தவும் அவசியமானதாகும்."

அ. கற்றல் சூழல் என்னும் எண்ணக்கருவினை வரையறுக்க. இதன் முதன்மைக் கூறுகள் எவை?

(07 புள்ளிகள்)

ஆ. பயனுள்ள கற்றல் சூழலை வடிவமைப்பதில் உடல், உள, உளவியல் காரணிகளின் பங்களிப்பினை விளக்குக. ஒவ்வொன்றுக்கும் உதாரணம் தருக.

(07 புள்ளிகள்)

இ. தொழில்நுட்ப ஒருங்கிணைப்பானது கற்றல் சூழலை எவ்வாறு மேம்படுத்தும் என விளக்குக. இச் செயல்முறையில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளக் கூடிய சவால்கள் எவை?

(06 புள்ளிகள்)

12. "ஆரம்பப் பாடசாலை ஆசிரியரொருவரின் வகிபங்கு என்பது வெறுமனே அறிவை பரப்புவது மட்டுமல்லாது பல்வேறு பொறுப்புக்களையும் உள்ளடக்கியதாகும்."

அ. ஆரம்பப் பாடசாலை பிரதான வகிபங்குகள் மூன்றினை (03) இனங்கண்டு விளக்குக. இவ் வகிபங்குகள் எவ்வாறு விளைதிறனான கற்பித்தலுக்கு பங்களிப்புச் செய்கின்றன.

(07 புள்ளிகள்)

ஆ. ஆரம்பக் கல்விச் சூழலில் ஆசிரியரொருவரின் பல்வகைப் பணிகள் மற்றும் செயற்பாடுகளை விளங்கிக் கொள்வது எந்தளவு முக்கியம் என்பதனை விளக்குக. உங்களின் கருத்துக்களை விளக்க பொருத்தமான உதாரணங்களை முன்வைக்குக.

(07 புள்ளிகள்)

இ. ஆசிரியரொருவரின் வாண்மைத்துவ வகிபங்கு மற்றும் பொறுப்புக்கள் குறித்த விளக்கம் எவ்வாறு கற்றல் அடைவில் தாக்கம் செலுத்தும் எனப் பரிசீலிக்குக.

(06 புள்ளிகள்)



127

13. (A) அல்லது (B) இற்கு மாத்திரம் விடை தருக.

**A.** "ஆரம்பக் கல்வியின் கற்றல் கற்பித்தல் செயலொழுங்கில் கணிப்பீடு அடிப்படைக் கூறாகக் காணப்படுகின்றது."

அ. ஆரம்பக் கல்வியில் காணப்படும் கணிப்பீட்டை வரையறுக்குக. இதன் பிரதான நோக்கங்கள் எவை?

(07 புள்ளிகள்)

ஆ. இடைநிலைக் கணிப்பீடு (தொடர் கணிப்பீடு), இறுதிநிலைக் கணிப்பீடு (கூட்டுக் கணிப்பீடு) ஆகியவற்றை வேறுபடுத்தி காட்டுக. இவையிரண்டு கணிப்பீடுகளையும் ஆரம்ப வகுப்புக்களில் எவ்வாறு அமுல்படுத்த முடியுமென உதாரணம் தருக.

(07 புள்ளிகள்)

இ. கணிப்பீட்டுச் செயலொழுங்கில் பின்னூட்டத்தின் முக்கியத்துவத்தினை கலந்துரையாடுக. மாணவரின் கற்றலுக்கும் விருத்திக்கும் வினைத்திறனான பின்னூட்டம் எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றது?

(06 புள்ளிகள்)

**B.** "கற்பித்தல் திறனை மேம்படுத்த விரும்பும் ஆசிரியர்கள் கல்வியில் வளரும் சூழ்நிலைக்கேற்ப தங்களை செம்மையாக்கிக் கொள்வது மிகவும் அவசியமானதாகும்."

அ. ஆசிரியர் வாண்மைத்துவம் என்பதனை வரையறுக்குக. ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் தொடர்ச்சியான வாண்மைத் திறன் விருத்தியில் ஈடுபடுவது ஏன் அவசியமானது.

(07 புள்ளிகள்)

ஆ. வினைத்திறனனான கற்பித்தலுக்கு பங்களிப்பு செய்யும் வாண்மைத்திறன் அறிவின் பிரதான கூறுகளை விபரிக்குக. இக்கூறுகள் எவ்வாறு ஒன்றுடனொன்று தொடர்புபட்டு ஆசிரியத்துவ பயிற்சிக்கு துணைபுரிகின்றன.

(07 புள்ளிகள்)

இ. ஆசிரியரின் வாண்மைத்திறன் விருத்தியில் சுய கணிப்பீடும் சகபாடிகளின் பின்னூட்டமும் எவ்வாறு உதவுகின்றன என பின்னோக்குக. இந்த நடைமுறை எவ்வாறு பாடசாலைச் சூழலில் அமுல்படுத்தப்படுகின்றது என்பதற்கு உதாரணம் தருக.

(06 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -